# 21-11-2023 செய்தி

## இனியும் தொடர வேண்டுமா மரண தண்டனை?

- மத்திய அரசு கொண்டுவர இருக்கும் புதிய குற்றவியல் சட்டத்தை ஆய்வு செய்துவரும் நாடாளுமன்ற நிலைக் குழு, புதிய சட்டத்தில் மரண தண்டனை சேர்க்கப்பட வேண்டுமா, கூடாதா என்பதை மத்திய அரசின் முடிவுக்கே விட்டவிடுவதாக அறிவித்துள்ளது.
- இந்திய தண்டனைச் சட்டத்துக்கு மாற்றாக மத்திய அரசு கொண்டு வந்துள்ள பாரதிய நியாய சன்ஹிதா என்னும் புதிய சட்டத்துக்கான மசோதா, உள்துறை விவகாரங்கள் மீதான நாடாளுமன்ற நிலைக் குழுவின் ஆய்வுக்கு விடப்பட்டுள்ளது.
- நீதியின் பார்வையில் எங்கேனும் தவறு நிகழும்பட்சத்தில் குற்றம் இழைக்காதவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுவிடும் ஆபத்து இருப்பதை நிலைக் குழு அங்கீகரித்துள்ளது.
- மரண தண்டனையால் குற்றங்கள் தடுக்கப்படுவதற்கோ மரண தண்டனை நீக்கப்பட்டுவிட்ட நாடுகளில் குற்றங்கள் அதிகரித்திருப்பதற்கோ எந்த ஆதாரமும் இல்லை என்பதால், உலக அளவில் மரண தண்டனையை முற்றிலும் ஒழிப்பதற்கான மனநிலை வலுப்பெற்று வருவதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
- அரிதினும் அரிதான குற்றங்களுக்கே மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதை இந்திய உச்ச நீதிமன்றம் பல தீர்ப்புகளின் வழியாக உறுதிப்படுத்தியுள்ளது.
- 2022இல் மனோஜ் எதிர் மத்தியப் பிரதேச அரசு வழக்கில் விசாரணை நீதிமன்றங்கள், ஒவ்வொரு வழக்கிலும் மரண தண்டனை தவிர்ப்புக்கான சூழ்நிலைகளைப் பரிசீலிப்பதற்கான நடைமுறைசார்ந்த வழிகாட்டுதல்களை உச்ச நீதிமன்றம் வழங்கியது.

## உலக அளவில் 2021 முதல் தட்டம்மை உயிரிழப்புகள் அதிகரிப்பு

- உலக அளவில் 2021 ஆம் ஆண்டு முதல் தட்டம்மை உயிரிழப்புகள் 43 சதவீதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு (டபிள்யூ எச்ஓ) தெரிவித்துள்ளது.
- கடந்த 2022 ஆம் ஆண்டில் உலக அளவில் 37 நாடுகளில் பெரிய அளவிலான தட்டம்மை பரவல் ஏற்பட்டது. அதற்கு முன், 2021 ஆம் ஆண்டில் 22 நாடுகளில் இந்நோய் பரவல் காணப்பட்டது.
- தட்டம்மை என்பது வைரஸ் கிருமி மூலம் பரவக்கூடிய நோயாகும். இந்நோயால் பாதிக்கப்பட்ட நபர் இருமும் போதும் தும்மும் போதும் இது எளிதாகப் பரவுகிறது. இதனால் கடுமையான நோயும், இறப்பும் கூட ஏற்படுகிறது.

## மனித எலும்பு ஆராய்ச்சி

- சிவப்பணுக்களில் ஹீமோகுளோபின்(Haemoglobin) எனும் இரும்பு மிகுந்த புரதப் பொருள் ஒன்று இருக்கிறது. இது சிவப்பாக இருக்கிறது.
- அதனால், ரத்தமும் சிவப்பாக இருக்கிறது. உடல் பாகங்களுக்குத் தேவைப்படும் ஆக்ஸிஜனை சுமந்து செல்வதும், நுரையீரல் வழியாக கார்பன் – டை– ஆக்ஸைடை வெளியேற்ற உதவுவதும் ஹீமோகுளோபின் செய்யும் முக்கியமான பணிகள்.

**இதுவரை**

- ஹீமோகுளோபின் என்பது எலும்பின் உள்ளே இருக்கும் எலும்பு மஜ்ஜையில்தான் (Bone marrow) உற்பத்தியாகிறது என்று அறிவியலாளர்கள் காலம் காலமாகச் சொல்லிக் கொண்டிருந்தனர்.
- அப்படியில்லை எலும்புக்கு வெளியே இருக்கும் குருத்தெலும்புத் (Cartilage) திசுக்களிலும் ஹீமோகுளோபின் உற்பத்தியாகிறது என்று சீனாவில் இப்போது கண்டறிந்துள்ளனர்.
- சீனாவைச் சேர்ந்த ஃபெங் ஷங், குயாங் சன் என்ற இரு விஞ்ஞானிகள் இதனை கண்டறிந்தனர்.

**என்ன நன்மை**

- தற்போது குருத்தெலும்பு வளர்ச்சிப் பிரச்சினைகள் காரணமாகப் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. அவற்றுக்கு, நவீன மருத்துவத்தில் எலும்பு மஜ்ஜையிலிருந்து ஸ்டெம் செல்கள் தயாரிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- இனி, அந்தச் சிகிச்சையில் மாற்றங்கள் ஏற்படலாம். எலும்பு மஜ்ஜைக்கு மாற்றாகக் குருத்தெலும்பு வளர்ச்சித் தட்டுகளிலிருந்து ஸ்டெம் செல்கள் தயாரிக்கப்படலாம். மூட்டு நோய்கள், எலும்பு உருக்குலைவு ஆகியவை தொடர்பாக இதுவரை விளக்கப்பட்டிருக்கும் நோய்க் கோட்பாடுகளுக்கு எதிர்காலத்தில் புதிய விளக்கங்கள் தரப்படலாம். தற்போது தீர்வு இல்லாமல் தவிக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அப்போது தீர்வு கிடைக்கும்.